**த. நா.ச.பே. எண் : 010** **நாள் : 21.03.2018**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (21.3.2018) சட்டப்பேரவையில், நாகப்பட்டினம் மாவட்டம், வெள்ளையாற்றில் தவறி விழுந்து உயிரிழந்த கீழ்வேளூர் வட்டம், செருதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.முருகேசன் என்பவரின் மகன் செல்வன் சுஸ்மிதாசன் என்பவரின் குடும்பத்திற்கு நிவாரணம் வழங்குவது குறித்து விளக்கம் அளித்தார்கள்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் வட்டம், செருதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகேசன் என்பவரின் மகன் செல்வன் சுஸ்மிதாசன் என்பவர் 5.12.2017 அன்று வேளாங்கண்ணி அருகே வெள்ளையாற்றில் தவறி விழுந்து உயிரிழந்துள்ள சம்பவம் தொடர்பாக நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் தனது விரிவான அறிக்கையை அரசுக்கு அளித்துள்ளார்.

மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல, செல்வன் சுஸ்மிதாசன் என்பவர் 5.12.2017 அன்று ஒகி புயலால் வெள்ளாற்றில் அடித்துச்செல்லப்பட்டு உயிரிழக்கவில்லை என்றும் இவர் சிறிய கட்டுமர படகில் தனது நண்பர் தாமோதரன் என்பவருடன் மீன் பிடிக்கச் சென்ற போது, ஆற்றின் குறுக்கே இருந்த மதகு சுவரில் படகு மோதி கவிழ்ந்ததில், பலத்த அடிபட்டு, ஆற்றில் விழுந்துள்ளார் என்றும், தலையில் அடிபட்டதன் காரணமாக நீச்சல் தெரிந்தும், அவரால் மீண்டு வர முடியாமல் வெள்ளாற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தன்னுடைய அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், உயிரிழந்த செல்வன் சுஸ்மிதாசனின் குடும்ப சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அவரது குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**